இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 292 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 19 – திங்கள்கிழமை 02 ஜூன் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 292 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 19 - Monday 02 June 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மதுரையில் கழகப் பொதுக் குழு!

இந்திய அரசியல் - தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன!

மதுரை, ஜூன் 2- முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (1.6.2025) கழகப் பொதுக் குழு கூடியது. இப்பொதுக் குழுவில் இந்திய அரசியலை, தமிழ் நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் 27 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி கள் ஆண்டுக்கு ஒருமுறை பொதுக் குழுக் கூட்டத்தையும், 2 முறை செயற்குழுக் கூட்டத்தையும் நடத்த வேண்டும் என்பது விதிமுறை ஆகும். அந்த வகையில், தி.மு.க. வின் பொதுக்குழுக் கூட்டம் மதுரை உத்தங்குடியில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலை தொடங்கி நடை பெற்றது.

பொதுக் குழுக் கூட்டத்திற்காக மதுரை மேலூர் நெடுஞ்சாலையில் 20 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டது. பொதுக் குழுக் கூட்ட அரங்கிற்கு 'கலைஞர் திடல்' என்று பெயர் சூட்டியுள்ளனர். மேடையில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டா லின் அவர்கள், பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச் செய லாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாள ரும், அமைச்சருமான பி.மூர்த்தி உள்ளிட்ட 11 பேர் அமரும் வகையில் இருக்கை வசதி செய்யப்பட்டிருந்தது.

100 அடி உயர கொடிக்கம்பம்!

100 அடி உயர தி.மு.க. கொடி கம்பம் நடப்பட்டுள்ளது. இதில் தி.மு.க. கொடியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்து பொதுக் குழுக் கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

அண்ணா அறிவாலயம் போன்ற அரங்கின் முகப்பு!

பொதுக்குழு கூட்டத்தின் முகப்பு அரங்கம் சென்னை அண்ணா அறி வாலயம் போன்று அமைக்கப்பட்டு கலைஞர் அவர்களின் வெண்கல சிலை நிறுவப்பட்டிருந்தது. அண்ணா அறிவாலயத்தில் இருப்பது போன்று புல்வெளிகளும், பூத்துக் குலுங்கும் மலர் செடிகளும் நுழைவாயில் பாதையை அலங்கரிக்கப்பட்டி ருந்தன. கூட்ட அரங்கு முழுவதும் குளு, குளு ஏ.சி. வசதி செய்யப்பட்டி ருந்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க 27 தீர்மானங்கள்!

கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் 27 வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொரு தீர்மானமும் படிக்கப்பட்ட போது அத்தீர்மானத்தை பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி அத்தீர்மானத் திற்கு ஒப்புதல் அளித்தனர்.

இரங்கல் தீர்மானம்!

கழகப் பொதுக்குழு கூடியதும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாள ரும், அமைச்சருமான பி.மூர்த்தி அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதனையடுத்து கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங் கோவன் இரங்கல் தீர்மானத்தைப் படித்தார். அதில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், போப் பிரான்சிஸ் உள்ளிட்ட மறைந்த கழக உறுப்பினர் களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 3ஆம் நாள்

செம்மொழி நாள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
102ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாள் : 3.6.2025
நேரம் : காலை 9.30 மணி
இடம் : ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை

தமிழகத்திற்கு மட்டுமல்ல பரந்து விரிந்த இந்த இந்திய அரசியலுக்கும் வழிகாட்டியாக இருந்தவர் கலைஞர் அவர்கள்!
- மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

ஜூன் 3ஆம் நாள் - செம்மொழி நாள் விழா

நேரம் : காலை 10.15 மணி, இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை

கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்குதல்!

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய நூல்கள் வெளியிடுதல்!

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உயர்த்தப்பட்ட உதவித்தொகை ஒப்பளிப்பு ஆணை வழங்குதல்!

போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்க்கு பரிசுகள் வழங்குதல்!

தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை மலர் வெளியிடுதல்!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

வள்ளுவர் கோட்டம், சென்னை

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

காவல் துறையில் மகளிர்

பெரியார் நினைவு சமத்துவபுரம்

அய்யன் திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி

வேளாண் பல்கலைக்கழகம், கோவை

குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசி

ஹூண்டாய் கார் கம்பெனி, சென்னை

செ.ம.தொ.இ/561/வரைகலை/2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009